**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**

**TIRUVANNAMALAI.**

**S.C. NO. 73/2023**

**PW3**

| | | |
|---|---|---|
| Name | : | சங்கீதா |
| Father's/Husband's Name | : | காந்தரூபன் |
| Village | : | |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 19.06.2025.

Accused present.

**முதல் விசாரணை**

நான் வந்தவாசி தாலுக்கா மேலப்பாளையம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன் . ஆஜர் எதிரியை நான் பார்த்தது இல்லை . இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது . இவ்வழக்கில் இறந்து போனவரை எனக்கு தெரியாது . இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு வழக்கறிஞர் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டி, அனுமதிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிஸ் விசாரணையில் கடந்த 18.09.2022 அன்று மதியம் 3.30 மணியளவில் ராஜகோபால் செட்டியார் பாத்திரக்கடையில் நான் பாத்தி்ரம் வாங்க சென்றபோது ஆஜர்எதிரி அங்கு வந்து அடகு வைத்து செல்போனை மீட்க பணம் கொடுக்காமல் தகராறு செய்துகொண்டிருந்தார் என்றும் , அதற்கு ராஜகோபால் செட்டியார் செல்போன் தொகை 1200- அடகுவைத்த ரசீதை எடுத்துவருமாறு திருப்பி அனுப்பினார் என்றும் , அப்போது அவரை எதிரி ஆபாசமாக பேசி சத்தம்போட்டுக்கொண்டிருந்த எதிரியை ராஜகோபால் மகன் பாடலி மற்றும்

அவர்மனைவி மகேஸ்வரி ஆகியோர் பணமும் , ரசீது அல்லது ஆதார்கார்டு நகல் ஆகியவற்றை கொண்டுவா என்று அனுப்பி வைத்ததாகவும் , 5 நிமிடத்தில் திரும்பி வந்து பணமும் , ரசீதும் கொடுத்து செல்போனை பெற்றுக்கொண்டு ராஜகோபால் செட்டியாரை பார்த்து ரசீது கொடுக்கலனா பொருள்கொடுக்கமாட்டியாடா என்று ஆபாசமாக திட்டி ராஜகோபாலை அடித்து சுவற்றில் அவர் தலையை இடித்து விட்டார் என்றும், பின்னர் அங்கிருந்து அவரது இருசக்கர வாகனத்தில் சென்றுவிட்டார் என்றும், அப்போது காயம் அடைந்து சரிந்த விழுந்த ராஜகோபாலை அவரது மகன் மற்றும் மனைவி மகேஸ்வரி மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்றும் , பின்னர் அவர் இறந்துவிட்டார் என்றும் , சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிக்கு பயந்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.